R 2279 (page 94)

# யோவான்ஸ்நானனும், அவரைக் கொலைசெய்தவர்களும்

# JOHN THE BAPTIST AND HIS MURDERERS.

யோவான்ஸ்நானன், எதிர்காலத்தில் வரும் பரலோக இராஜ்ய வகுப்பாரில், மணவாட்டியின் அங்கத்தினர்களில் காணப்படுவதில்லை; ஆனால் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தீர்க்கத்தரிசிகள் அனைவரின் மத்தியிலும், இவர் பிரதானமானவர்களில் ஒருவராகக் காணப்படுவார்; இராஜ்யத்தினுடைய பூமிக்குரிய பாகத்தின் அங்கத்தினனாகப் பங்கெடுக்கும் சிலாக்கியம் அடைவார்; மேலும் பூமியெங்கும் காணப்படும் பிரபுக்களில் ஒருவராகக் காணப்படுவார். மேலும் இராஜ்யத்தின் ஓர் ஊழியக்காரனாக இவர் மிகவும் கனப்படுத்தப்படுவார், ஆசீர்வதிக்கப்படுவார் மற்றும் தேவனுடைய கிருபையினால் இவர் அழைக்கப்பட்ட ஸ்தானத்தில் பயன்படுத்தப்படுவார். மேலும் இப்படி இராஜ்ய வகுப்பாரின் ஊழியக்காரர்களாகக் காணப்படும் முற்பிதாக்கள், சுவிசேஷ யுகத்தில் ஜெயங்கொண்டவர் களைக்காட்டிலும் குறைவாய் உண்மையுள்ளவர்களாகக் காணப்படுவதின் நிமித்தமாக, சபையைவிட வேறுபட்ட விதத்தில் கனப்படுத்தப்பட்டார்கள் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நாங்கள் இங்குக் குறிப்பிடுகின்றோம்; ஒருவேளை அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கவில்லையெனில், அவர்கள் கனப்படுத்தப்படவே மாட்டார்கள். ஜெயங்கொள்பவர்கள் மாத்திரமே இராஜ்யத்தின் வேலையில் எந்த ஒரு பங்கையாகிலும் அடைய முடியும்; மேலும் அந்த வேலையில் எந்த ஒரு பங்கையாகிலும் அடைவது என்பது கனமுள்ளதாகவும், வாஞ்சிக்கப்பட வேண்டியதாகவும் காணப்படும். தேவன் இரண்டு வகுப்பாரைப் பெற்றுக்கொள்ள விரும்பினார்; ஆகையால் அவரது திட்டத்தில், இரண்டு வகுப்பாரை அழைத்தார்; இவ்விரு வகுப்பாரும் கனமுள்ளவர்களாகவும், கனமுள்ள ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர் - ஒன்று பூமிக்குரிய தளத்திற்கு, மற்றொன்று ஆவிக்குரிய தளத்திற்கு என்று அழைக்கப்பட்டுள்ளனர். இவ்விரு வகுப்பாரிலும், எந்த ஒரு வகுப்பாரும் அழைக்கப்பட வேண்டும் என்ற கட்டாயம் காணப்படவில்லை; கர்த்தரால் அழைக்கப்படுவதும், அவரது ஊழியத்தில் எந்த ஒரு பாகத்திலாகிலும் அவரால் பயன்படுத்தப்படுவதும் கனமுள்ள காரியமாகும்; இப்படியாகப் பயன்படுத்தப்படும் அனைவரும் அவர்களுக்கேயுரிய தளத்தில் பூரணர்களாகக் காணப்படுவார்கள்; மேலும் அவரவருக்கான நிலைமையில் முழுமையாய்த் திருப்தி உடையவர்களாகவும் இருப்பார்கள்; அதாவது மீன் தண்ணீருக்குள் காணப்படுவதிலும், பறவைகள் ஆகாயத்தில் காணப்படுவதிலும் திருப்தியாய் இருப்பது போன்றதாகும்.

------------------